**புலத்கொஹுபிடிய பிரதேச சபை**
**கேகாலை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 27 ஆம் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந் நிதிக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கை 2020 ஜுன் 29 மற்றும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 ஆகஸ்ட் 11 ஆம் திகதியும் தவிசாளரிற்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிதிக்கூற்றுகளின் 2019 திசெம்பர் 31 இல் புலத்கொஹுபிடிய பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் 03 கணக்கு விடயங்களிற்குரிய நிதிக்கூற்றுக்கள் மீதி மற்றும் உபயோக பதிவேடுகள் மீதிக்கிடையில் ரூபா 72,787 வித்தியாசம் காணப்பட்டது. | நிதிக் கூற்றுக்களில் காட்டப்படும் மீதி உபயோகப் பதிவேடுகளுடன் இணக்கஞ் செய்ய வேண்டும். | இவ் வேடுகளை ஒழுங்கு முறைப்படி நாளாதுவரையாக்கல் தற்போது செய்யப்பட்டுக் கொண்டு இருப்பதுடன் எதிர்காலத்தில் சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

### 1.4 இணங்காமை

#### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1988 இன் 56 ஆம் இலக்க, மற்றும் 2000 இன் 53 இலக்க சட்டங்களினால் திருத்திய 1980 இன் 47 இலக்க தேசிய சுற்றாடல் | சுற்றாடல் அனுமதிப்பத்திர கட்டணம் அறவிட வேண்டிய 16 கைத்தொழிலிளிருந்து ரூபா 64,000 ஆன | சட்ட ஏற்பாடு பிரகாரம் கட்டணம் அறவிட நடவடிக்கை எடுக்க | 2016 ஆண்டு சுற்றாடல் அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொண்ட 2019 ஆண்டு சுற்றாடல் அனுமதிப்பத்திரம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | சட்டத்தின் 23(அ) பிரிவு மற்றும் இலக்கம் 1534/18 மற்றும் 2008 பெப்ரவரி 01 ஆம் திகதிய வர்த்தமானி. | கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | வெண்டும். | பெற வேண்டியிருந்த கைத்தொழில்களில் 11 இற்கு அனுமதிப்பத்தரம் விநியோகிக்கப்பட்டுள்ளதுடன் 03 மூடப்பட்டுள்ளன. ஒருவர் கொடுப்பனவை மறுத்துள்ளார். அதற்கு மேலதிகமாக 03 புதிய கைத்தொழில்களிற்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | 2009 ஏப்ரல் 16 ஆம் திகதிய 09/2009 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | உத்தியோகத்தர்களின் உள் வரவு மற்றும் வெளிச் செல்லல்களை அடையாலமிட விரல் அடையால இயந்திரம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | விரல் அடையால இயந்திரம் ஒன்றை இவ்வாண்டு முடிவடைய முன்னர் கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுத்துக் கொண்டிருப்பதாக அறிவிக்கிறேன். |
| (இ) | 1988 மே 17 ஆம் திகதிய 1988/22 ஆம் இலக்க உள்ளுராட்ச்சி ஆணையாளர் சுற்றறிக்கையின் 2 ஆம் பந்தி | 5 ஆண்டுகளிற்கு ஒரு முறை வீதவரி மதிப்பீடு மேற்கொள்ளப்பட வேண்டிய போதும் 2009 ஆண்டின் பின்னர் வீத வரி பெறுமதி மதிப்பீடொன்று மேற்கொள்ளப்படாததால் சபை அதிகார எல்லையில் அமைந்துள்ள 981 வீதவரி ஆதனங்களிற்காக பெற முடியுமாக இருந்த வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும | வீதவரி மதிப்பீட்டிற்காக மதிப்பீட்டு திணைக்களத்திற்கு 2015 ஆண்டிலிருந்து பல சந்தர்ப்பங்களில் எழுத்து மூலம் அறிவித்துள்ள போதும், இது வரை மதிப்பீட்டு நடவடிக்கைகளிற்கு வரவில்லை எனவும், போதிய அலுவலர்கள் இல்லையென மதிப்பீட்டு திணைக்களம் அறிவித்துள்ளதாக அறிவிக்கிறேன். |
| (ஈ) | 2009 மார்ச் 09 ஆம் திகதிய 2009/1 ஆம் இலக்க சபரகமுவ உள்ளுராட்ச்சி ஆணையாளர் சுற்றறிக்கையின் 1.10 மற்றும் 11 ஆம் பிரிவுகள் | சபைக்கு சொந்தமான 06 கடையறைகளை உப குத்தகையிற்கு வழங்கியிருந்த போதும், குத்தகை உடன்படிக்கையை இரத்து செய்து மீண்டும் டெண்டர் கோரல் அல்லது உப | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும | கடையறைகளை குத்தகை வழங்கும் ஒழுங்கு முறைமை ஒன்று கடைபிடிக்கப்படாதுடன் தற்போது சரிசெய்ய மற்றும் குத்தகை உடன்படிக்கைகளை |

| | | | |
|---|---|---|---|
| | குத்தகைகாரர் தொடர்பாக சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் யேனும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும் குத்தகை பணம் மற்றும் உப குத்தகை பணத்திற்கிடையிலான வித்தியாசம் 45,850 ஆக இருந்தது. | | புதுப்பிக்க தேவையான நடவடிக்கை எடுக்கப்படுகின்றதாக அறிவிக்கிறேன். |
| 1.12 ஆம் பிரிவு | குத்தகை உடன்படிக்கைகளை வருடாந்தம் புதுப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டிய போதும் 2010 ஆண்டின் பின்னர் குத்தகை உடன்படிக்கைகளை புதுப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும | கருத்து வழங்கப்படவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 3,172,460 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 5,081,841 ஆனது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆணடு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| i | வீதவரி மற்றும் வரி | 1,650,280 | 1,351,570 | 1,803,799 | 79,031 | 1,735,400 | 1,351,669 | 1,761,554 | 140,075 |
| ii | வாடகை | 697,590 | 825,712 | 825,712 | 523,465 | 1,540,950 | 1,540,950 | 1,064,297 | 523,465 |
| iii | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 248,840 | 254,690 | 254,690 | - | 298,100 | 277,768 | 277,768 | - |
| iv | ஏனைய வருமானம | 44,109,952 | 39,883,252 | 28,964,570 | 15,196,181 | 39,056,888 | 36,260,941 | 36,260,941 | 19,893,307 |

### 2.2.2 வீதவரி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் நிலுவை வீதவரி மீதி ரூபா 65,982 ஆனதுடன் அவற்றில் 3 ஆண்டுகளை விஞ்சிய ரூபா 17,406 ஆனது. | அறவிட வேண்டிய வருமானம் தாமதமின்றி அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2020 மே 31 திகதியளவில் ரூபா 21,862 ஆன பணம் அறவிடப்பட்டுள்ளதாகவும், நிலுவையிலிருந்து ரூபா 6,538 இனை பதிவழிக்க உள்ளூராட்சி உதவி ஆணையாளரிற்கு சமர்பிக்கப்பட்டுள்ளதாகவும், எஞ்சிய பணத்தை அறவிட நடவடிக்கை எடுப்பதாகவும் அறிவிக்கிறேன். |

### 2.2.3 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபை பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2019 திசெம்பர் 31 திகதிற்கு பெற வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் முறையே ரூபா 5,088,516 மற்றும் ரூபா 7,171,440 ஆனதுடன் ஓராண்டை விஞ்சிய நிலுவை முத்திரைக் கட்டண மீதி ரூபா 1,966,942 ஆனது. | தாமதமின்றி அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | உரிய அட்டவணைகள் கிடைத்தவுடன் பணத்தை அறவிட நடபவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபை அதிகார சட்டத்தின் 03 பந்தியின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும், மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

### (அ) திண்மக் கழிவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| உக்கலடையாத கழிவு பொருட்களை வெளியிட சுகாதார ரீதியான நில நிரப்பும் முறையை பின்பற்றி இருக்கவில்லை. | திண்மக் கழிவு முகாமையை ஒழுங்குப்படுத்த வேண்டும். | திண்மக் கழிவு முகாமைத்துவ அலகில் காணப்படும் குறைபாடுகளை புதிய ஒதுக்கீட்டை பெற்று அல்லது கிடைக்கும் ஒதுக்கீட்டின் பிரகாரம் எதிர்வரும் ஆண்டுகளில் பூர்த்தி செய்வதாக அறிவிக்கிறேன். |

**(ஆ) சுற்றாடல் பிரச்சினை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மலசல கழிவுகளை வெளியிட பொருத்தமான இடமொன்று சபைக்கு இல்லாததால் அவ் வசதிகள் உள்ளவர்களுக்கு மாத்திரம் அச் சேவையை பெற்றுக் கொடுத்து இருந்தது. | பிரதேச சபை சட்டத்தின் 3 ஆம் பிரிவு பிரகாரம் மக்களின் நலன்புரி தொடர்பான செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். | ஒதுக்கீடு கிடைத்தவுடன் எதிர்காலத்தில் சன நெரிசல் குறைந்த பிரதேசமொன்றில் காணியொன்றை கொள்வனவு செய்து மலசல கழிவுகளை வெளியிட உரிய முறையிலான இடமொன்றை அமைக்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

**3.2 மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2019 திசெம்பர் 31 திகதியில் அங்கீகரிக்கப்பட்ட ஆளணியில் 7 பதவி வகைகளில் 11 வெற்றிடங்கள் காணப்பட்டன. இப் பதவிகளிற்கிடையில் ஒரு வருமான நிர்வாகத்தர் பதவி 2019 செப்டம்பர் 19 இலிருந்தும், ஒரு படவரைஞர் பதவி 2013 ஆகஸ்ட் 02 இலிருந்தும், வேலை கள நிர்வாகத்தர் 2017 ஏப்ரல் 19 இலிருந்தும், வெற்றிடமாக காணப்பட்டன. | முக்கியமான வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். | தற்போது சபையில் நிலவும் வெற்றிடங்கள் தொடர்பாக மாதாந்தம் உள்ளூராட்சி ஆணையாளர் ஊடாக பிரதான அமைச்சிற்கு தகவல் அறிவிக்கப்படுகின்றதாக அறிவிக்கிறேன். |

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.3.1 சொத்துக்களின் பாதுகாப்பபை உறுதிப்படுத்தாமை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | சபைக்கு சொந்தமாக ரூபா 58,935,755 பெறுமதியான வாகனங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் இருந்த போதும், போதிய வாகன தரிப்பிட வசதிகள் காணப்படவில்லை. | சொத்தக்களை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | காணப்படும் வாகன தரிப்பிடத்தின் புதிதாக ஒரு பகுதியை நிர்மாணிக்க ரூபா 421,120 ஆன உத்தேச மதிப்பீடொன்று 2020 ஜூன் 09 ஆம் திகதி மகா சபை கூட்டத்திற்கு |

| | | | |
|---|---|---|---|
| | | | முன்வைக்கப்பட்டுள்ளதுடன் சபை நிதியத்தினால் எதிர்காலத்தில் அதனை நிர்மாணிப்பதாக அறிவிக்கிறேன். |
| (ஆ) | பிரதேச சபைக்கு சொந்தமான பொது கிணறுகள், சுடுகாடுகள் தொடர்பாக ஆய்வொன்றை மேற்கொண்டு உரிமையை உறுதி செய்து கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சொத்தக்களை இனங்கண்டு உரிமையை உறுதி செய்து கொள்ள வேண்டும். | இது தொடர்பாக ஆய்வொன்றை மேற்கொள்ள குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் குறித்த நடவடிக்கைகளை எதிர்காலத்தில் மேற்கொள்வதாக அறிவிக்கிறேன். |

### 3.3.2 சுவீகரிக்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபரகமுவ மாகாண சபை மற்றும் உள்ளூராட்ச்சி அமைச்சினூடாக 2015 ஆண்டு முதல் 2019 ஆண்டு வரை வழங்கப்பட்டிருந்த ரூபா 56,560,755 பெறுமதியான 13 வாகனங்களின் மற்றும் இயந்திரங்களின் உரிமையை சுவீகரிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2017 திசெம்பர் 21 ஆம் திகதி 02/2017 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் 2(i) ஆம் பந்தி பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | வாகனங்களை சுவீக்க தேவையான நடவடிக்கைகள் எடக்கப்படுவதாக அறிவிவக்கிறேன்.<br>. |

### 3.3.3 விளைவற்ற சொத்தக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பெறுமதி ரூபா 6,221,373 ஆன கார்பேஜ் கம்பெக்டரொன்று ஓராண்டில் இருந்தும், பெறுமதி ரூபா 1,300,000 ஆன கெப் வண்டியொன்று மற்றும் பெறுமதி ரூபா 2,655,318 ஆன டெக்டர் ஒன்றும் 04 ஆண்டு காலமாக விளைவற்று நிலவின. | சொத்துக்களை பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | சபைக்கு நன்கொடையாக வழங்கியுள்ள கார்பேஜ் கம்பெக்டரை பயன்படுத்தி சேகரிக்க போதிய குப்பைகள் இல்லாததால் இவ் வண்டியை கைமாற்ற ஆலோசிக்கப்பட்டுள்ளது. கெப் வண்டி மற்றும் டெக்டர் வண்டியை டிபோ பொறியியல் அறிக்கை பிரகாரம் திருத்துவதற்கு அரச அபிவிருத்தி இயந்திர உபகரணங்கள் கேகாலை அலகிற்கு அனுப்பப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன். |

### 3.3.4 வாகனங்கள் பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்கு சொந்தமாக 15 வாகனங்கள் காணப்பட்ட போதும், உள்ளவாறான சாரதிகளின் எண்ணிக்கை 04 ஆகையால் வாகனங்களின் குறை பயன்பாடொன்று ஏற்பட்டிருந்தது. | வாகன எண்ணிக்கைக்கு பொருத்தமான சாரதி எண்ணிக்கையை அங்கீகரித்து ஆட்சேர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | வேறு பதவிகளில் செயற்படும் கனரக வாகன சாரதி அனுமதிப்பத்திரமுள்ள சாரதிகளை சேவையில் ஈடுபடுத்தி குறித்த செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றதாக அறிவிக்கிறேன். |

### 3.4 பெறுகைகள் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் ரூபா 19,776,217 பெறுகைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதும், பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | 2021 ஆண்டிற்குரியதாக பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்படுவதாக அறிவிக்கிறேன். |

## 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 ஜனவரி 12 ஆம் திகதிய DMA/01-2019 இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கை பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டம் 04 நடாத்தப்பட வேண்டிய போதும், மீளாய்வாண்டிற்காக இரண்டு கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2020 ஏற்பாடு செய்ததன் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டம் நடாத்தப்பட்டதாக அறிவிக்கிறேன். |

**4.2 தீர்க்கப்படாத கணக்காய்வு அவதானிப்புக்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரதேச சபை சட்டத்தின் 126 பிரிவின் கீழ் 09 விடயங்களை மேற்கொள்வதற்கு உப விதிகள் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் 2019 திசெம்பர் 31 திகதி வரையும் அங்கீகரிக்கப்படாததால் அனுமதிக்கப்பட்ட உப விதிகள் மாத்திரம் விதிக்கப்பட்டிருந்தன. | உப விதிகளை அங்கீகரித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஒரு உப விதி மாத்திரம் மதிப்பிற்குரிய ஆளுனர் அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் மூன்று உப விதிகள் உதவி ஆணையாளரின் அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் ஐந்து உப விதிகளின் வரைவுகள் தயாரிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன். |
| (ஆ) | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்வதற்கான உலகலாவிய குறிகாட்டிகளினூடாக சபை அதிகார எல்லையில் பொது மக்களின் வாழ்கை நிலை மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதும், நிதியம் இல்லாததன் மீது அவற்றின் பெறும்பாலானவைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | திட்டத்தை நடைமுறைப்படுத்த தேதையான நிதியத்தை பெற்றுக் கொள்ளக் கூடிய வழிகளை நோக்கி கவனம் செலுத்த வேண்டும். | கருத்து வழங்கப்படவில்லை. |